THIRU K. SUPPU : I am raising a point of order whether what the hon. Member has stated can come under point of order and whether it could be replied to by the Hon. Chief Minister. Is it according to rule, I want to know.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சில நேரங்களில் ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்ற முறையில் கேள்வி நேரம் முடிந்ததும் உறுப்பினர்கள் மீண்டும் சில கேள்விகளைக் கேட்பார்கள். போலீஸ் ஐ.ஜி. ஆபீசில் பறக்கிற கொடி பற்றி கூட, திரு. பொன்னப்ப நாடார் சில கேள்விகளை பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்ற முறையில் கேட்டுள்ளார்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றுதான் கேட்கக் கூடாது. பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் என்ற முறையில் கேட்கலாம்.

(ஆ) திருவான்மியூரில் நடந்த பகல் கொள்ளை குறித்து

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், திருவான்மியூர் பகுதியில் ஒரு பீதி நிலவுகிறது. பட்டப் பகலில் கொள்ளையடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக போலீசார் தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

(இ) பி.ஏ., பி.எஸ்ஸி. வினாத்தாள்களில் பிரதம அமைச்சர் பேசிய ஓர் அரசியல் கருத்தைப் பற்றி குறிப்பிடப் பட்டிருப்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன், இந்த வருடம் பி.ஏ., பி.எஸ்ஸி. கேள்வித்தாள்களில் பிரதம மந்திரி அவர்கள் ஒரு அரசியல் கருத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக, ஊழல் இந்த நாட்டில் சர்வ சாதாரணம் என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். (பேப்பரைப் படிக்க ஆரம்பிக்கிறார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் இங்கே படித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த நாட்டிலே இருக்கிற இளைஞர்கள் இடத்தில் இந்த மாதிரியான கருத்தைத் தோற்றுவிப்பது அவர்கள் மனதில் களங்கம் ஏற்படுத்துவதாக இருக்கும். இந்த விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா? அந்த மாதிரியான நிலையில் அரசாங்கத்தின் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கத்திற்கு அப்படி ஏதும் தகவல் வரவில்லை.

6. நடைமுறைக் கேள்வி.

சேரன், பல்லவன் போக்குவரத்துக் கழகங்களின் இலாப நட்டக் கணக்கு உறுப்பினர்களுக்கு வழங்கப்படாதது குறித்து.

DR. H. V. HANDE: Sir, before the Hon. Minister moves the Demand, I would like to raise a point of order. The practice in this House has been that whenever a demand comes before the House, the papers are sent to us sufficiently in advance. There is also a practice to send all papers connected with the particular Demand and also the brochures, to us sufficiently in advance in that we may get prepared for the discussion. But in the last two days, we have found that we have not been supplied with certain documents by the Assembly Department.

I would like to inform the House that one particular document, namely 'the profit and loss account' of the Corporations have not been sent to us. Is it an omission on the part of Assembly Department that the profit and loss account of Cheran Transport Corporation, Pallavan Transport Corporation, etc., have not been sent to us. If only we had been supplied with it, we would like to know the exact overall position, whether there is loss or profit on the whole, taking the Road Transport as a whole. Then only we can participate in the discussion effectively. For instance I may point out that as regards the sum of Rs. 45 lakhs......

Mr. SPEAKER: அதெல்லாம் வேண்டாம். உங்களுக்குக் காப்பி கிடைக்கவில்லை என்கிறீர்கள். அதுதானே. மற்ற கணக்குகள் எல்லாம் வேண்டாம்.